



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க தமிழ்மொழி

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது பெயர் தீரன்.
எனது தாய் நாடு தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் தமிழன்.

எனது தாய்மொழி தமிழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எமது
தேசியக்கொடியின்
வர்ணங்கள் சிவப்பும்
மஞ்சளும் கறுப்பும் ஆகும்.

இது எங்கள் தேசியப்பூ,
கார்த்திகைப்பூ.







இது எங்கள் தேசிய மிருகம்,
சிறுத்தை.

இது எங்கள் தேசியப்பறவை செண்பகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










எனது நாட்டில்
பல கனிய வளங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நாட்டில் பல மதங்களும் உள்ளன.



இது நல்லூர் முருகன் கோவில்.




இது மடு மாதா கோவில்.




இது காத்தான்குடி பெரிய பள்ளிவாசல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எனது நாட்டை போத்துகேயர்,
ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆக்கிரமித்து
500 ஆண்டுகள் ஆண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது அகதி முகாமில் வாழும் என்
சகோதரர்கள், இவர்களுக்கு நான்
இனிப்பு அனுப்புவேன்,
புத்தகம் அனுப்புவேன்.

அப்பாவிடம் கேட்டு அவர்களைப்
படிப்பிக்கச் சொல்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# JUSTICE

ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டார்கள்.
அவர்களுக்கு நான் நீதி தேடுவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கார்த்திகை 27
# மாவீரர் நாள்

மாவீரர் என் நாட்டை மீட்கப் போரிட்டார்கள்.
நான் அவர்களை வணங்குவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் ஒரு பிரித்தானியன்.
ஆனாலும் ஒரு குடியேற்றவாசியின் மகன்.
தமிழீழத்தில், நான் மண்ணின் மைந்தன்.
என் நாடு எனக்கே சொந்தம்.
அதுவே எனது தாய் நிலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்சம் இல்லை

அச்சம் இல்லை அச்சம் இல்லை
அச்சமென்பது இல்லையே

இச்சகத்து உளோரெல்லாம்
எதிர்த்து நின்ற போதிலும்
அச்சம் இல்லை அச்சம் இல்லை
அச்சமென்பது இல்லையே

உச்சி மீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சம் இல்லை அச்சம் இல்லை
அச்சமென்பது இல்லையே

- மகாகவி பாரதியார்

காப்புரிமை: ஈழத்து மழலைப் பதிப்பு 2010
ஈழத்து மழலைப் பதிப்பு, இல1, நீர்பூங்கா வியாபார மத்திய செயலகம்,
இலண்டன் வடக்கு 16. பிரித்தானியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் மீண்டும் வருவேன்.
என் தாய்நாட்டுக்கு மீண்டும் வருவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org